<u>முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

அசல் வழக்கு எண். 904/2023 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். பிரதிவாதி தோன்றாதரப்பினர் ஆவார். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரியா | மாவட்டம் | : ஈரோடு |
| க/பெ.பெயர் | : கிருஷ்ணசாமி | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : 36 |
| வட்டம் | : | | |

<u>முதல் விசாரணை</u>:

நான் வாதி வங்கி கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். வாதி வங்கிக்காக நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்,

1. 24.08.2021 தேதியில் உள்ள 1ம் பிரதிவாதியான வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்ப படிவம் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 12.08.2021 தேதியில் உள்ள BABA Agencies MSME தொழிலுக்காக அரசால் கொடுக்கப்பட்ட உதயம் சான்று அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 25.08.2021 தேதியில் உள்ள வாதி வங்கியின் கடன் அனுமதி உத்தரவு அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 25.08.2021 தேதியில் 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்து வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 25.08.2021 தேதியில் வாதி வங்கிக்கு 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்து எழுதிக் கொடுத்த Simple Agreement அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 28.08.2021 தேதியில் வாதியின் வங்கிக்கு 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்து எழுதிக்கொடுத்த Term Loan ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 25.08.2021 தேதியில் உள்ள வாதியின் வங்கிக்க 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்து எழுதிக் கொடுத்த வட்டி ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 25.08.2021 தேதியில் வாதியின் வங்கிக்கு 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்து எழுதிக்கொடுத்த கடன் தொடர்ச்சி கடிதம் (Letter of Continuity) அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 25.08.2021 தேதியில் உள்ள வாதியின் வங்கிக்கு 1ம் பிரதிவாதி கையெழுத்து செய்து எழுதிக்கொடுத்த கடன் பொறுப்பு கடிதம் ( Letter of Undertaking) அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10.25.08.2021 தேதியில் வாதியின் வங்கிக்கு 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் உத்தரவாத கடிதம் (Letter of Guarantee) அசல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11.25.08.2021 தேதியில் வாதியின் வங்கிக்கு 2ம்பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஈடு அடையாள அடமானம் (Equitable Mortgage) உறுதி மொழி கடிதம் அசல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12.25.08.2021 தேதியில் உள்ள ஈடு அடையாள அடமானத்திற்க்கு எழுதிக்கொடுக்கப்படும் Memorandum of Deposit of Title Deeds (AD–13) அசல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13.16.08.2021 தேதியில் வாதி வங்கிக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் உறுதி ஆவணம் அசல் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14.12.12.2013 தேதியில் உள்ள 2ம் பிரதிவாதி சி.கே.பாபுவிற்க்கு ஒரு கே.பி.அன்பழகன் கிரையம்செய்து கொடுத்து நம்பியூர் சார்பதிவக கிரைய பத்திரம் ஆவண எண்.4283/2013 அசல் **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15.12.12.2013 தேதியில் உள்ள 2ம் பிரதிவாதி சி.கே.பாபுவிற்க்கு ஒரு கே.பி.அன்பழகன் கிரையம்செய்து கொடுத்து நம்பியூர் சார்பதிவக கிரைய பத்திரம் ஆவண எண்.4284/2013 அசல் **வா.சா.ஆ.15**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16.16.08.2021 தேதியில் உள்ள அயலூர்கிராமம் பட்டா எண்,897 இணையதள நகல் **வா.சா.ஆ.16**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17. 16.08.2021 தேதியில் உள்ள அயலூர் கிராமம் பட்டா எண்.1833 இணையதள நகல் **வா.சா.ஆ.17**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18.16.08.2021 தேதியில் உள்ள அயலூர் கிராமம் ரீ.ச.எண்.155/1 பூமியின் அ.பதிவேடு இணையதள நகல் **வா.சா.ஆ.18**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

19. 16.08.2021 தேதியில் உள்ள அயலூர் கிராமம் ரீ.ச.எண்.155/4 பூமியின் அ.பதிவேடு இணையதள நகல் **வா.சா.ஆ.19**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

20. 13.08.2021 தேதியில் உள்ள அயலூர் கிராமம் ரீ.சர்வே எண்.155 பூமியின் புலவரைபடம் உண்மை நகல் **வா.சா.ஆ.20**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

21. 13.08.2021 தேதியில் உள்ள அயலூர் கிராமம் ரீ.சர்வே எண்.155 பூமியின் புலவரைபடம் உண்மை நகல் **வா.சா.ஆ.21**ஆக குறியீடு செய்யப்படுகிறது. .

22. 13.08.2021 தேதியில் அயலூர் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்று அசல் **வா.சா.ஆ.22**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

23. 06.08.2021 – 01.01.1991 முதல் 04.08.2021 வரையிலான அயலூர் கிராமம் ரீ.சர்வே எண்.155/4 பூமியின் வில்லங்க சான்றிதழ் இணையதள நகல் **வா.சா.ஆ.23**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

24. 08.02.2023 – 01.01.2017 முதல் 07.02.2023 வரையிலான அயலூர் கிராமம் ரீ.சர்வே எண்.155/4 பூமியின் வில்லங்க சான்றிதழ் இணையதள நகல் **வா.சா.ஆ.24**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

25. 07.03.2022 தேதியில் உள்ள வாதியின் வங்கி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பி வைத்த பதிவு ரீக்கால் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.25**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

26.23.04.2022 தேதியில் சார்வு செய்யப்படாமல் வாதியின் வங்கிக்கு 1ம்பிரதிவாதியிட இருந்து திருப்பபட்ட அஞ்சலக உறை அசல் **வா.சா.ஆ.26**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

27. 05.04.2023 தேதியில் பிரதிவாதியின் வங்கி வரவு, செலவு கணக்குபட்டியல் உண்மை நகல் **வா.சா.ஆ.27**ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாபடி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.